# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

**11**

# 1920-ல் யாழ்ப்பாணத்தில் உருவான இளைஞர் எழுச்சி

1919-ம் ஆண்டு ஆங்கிலக் கல்வி கற்ற சிங்களவர்களும், தமிழர்களும் சேர்ந்து இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கினர். இதை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர் சேர், பொன்னம்பலம் அருணாசலமாவாள்.

இந்த அமைப்பு, இங்கிலாந்து தொழில் கட்சி பாணியிலான மிதவாத அமைப்பாக இருந்தது. ஆனால் காந்தி, நேருவின் இந்திய தேசிய காங்கிரஸ், இந்தியாவுக்கு பூரண சுயராச்சியம் என்ற கொள்கையை முன்வைக்காத அன்றைய காலகட்டத்தில் அதை விட அதிக அதிகாரங்களைக் கோரிய தாபனமாக இலங்கைத் தேசிய காங்கிரஸ் இருந்தது.

பிரான்சின் விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம், என்கிற கோட்பாடுகளைப் பின்பற்றி இவ் அமைப்பு, சுதந்திரம், சமத்துவம், சமூக சீர்திருத்தம் என்ற கொள்கைகளை முன்வைத்தது.

இந்த அமைப்பின் வளர்ச்சியையிட்டு, அப்போது இலங்கையின் பிரித்தானிய ஆள்பதியாக இருந்த 'மன்னிங்' மிகவும் கவலை கொண்டார். இலங்கையை ஆண்ட பிரித்தானிய ஆள்பதிகளில் 'மன்னிங்' மிகவும் மதிநுட்பம்வாய்ந்த ஒருவர். இலங்கையில் பிரித்தானியர் ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்துள்ள மிகப் பெரிய சவாலாக இலங்கைத் தேசிய காங்கிரசை அவர் கருதினார். ஆதலினால் சற்றும் தயவு தாட்சண்யமற்ற முறையில் அதனை உடைத்தெறிய முற்பட்டார்.



இதற்காக அவர் தமிழ் சிங்கள தலைவர்களிடையே பிரச்சினைகளை உருவாக்குவதில் ஈடுபட்டார்.

1920-ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தை சீர்திருத்தப் போவதாக மன்னிங் அறிவித்த போது சட்ட நிருபண சபையில் தமிழருக்கான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் குறிப்பாக கொழும்பில் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவத் தொகுதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் சேர். பொன். அருணாசலம் கோரிக்கை வைத்தார். இந்தக் கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் ஒன்று திரண்டு எதிர்த்தனர்.

> **1920–ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தை சீர்திருத்தப் போவதாக மன்னிங் அறிவித்த போது சட்ட நிருபண சபையில் தமிழருக்கான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் குறிப்பாக கொழும்பில் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவத் தொகுதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் சேர். பொன். அருணாசலம் கோரிக்கை வைத்தார். இந்தக் கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் ஒன்று திரண்டு எதிர்த்தனர்.**

இதனால் மனமுடைந்த அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறி 1921 ல் தமிழர் மகா சபையை அமைத்தார். 'மன்னிங்' எதிர்பார்த்தபடி சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ் தலைவர்களுக்கும் இடையில் இனரீதியான பூசல்கள் எழுந்தன. இலங்கையில் அப்போது இருந்த தலைவர்களில் சேர்.பொன். அருணாசலம் கொஞ்சம் தீவிரமானவராக இருந்ததாலும் நல்ல ஆங்கில அறிவு உள்ளவராக இருந்ததாலும், அவர் தங்களுக்கெதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை தோற்றுவித்து விடுவார் என ஆங்கிலேயர்கள் பயந்தனர். எனவே அவரை மட்டந்தட்டுவதற்காக ஆள்பதி மன்னிங் பெரும்பான்மையான சிங்களவர்களுக்கு சார்பாக நடந்து கொண்டார்.

கொழும்பில் நிலைமை இவ்வாறு இருக்கும் போது 1920-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'யாழ்-ப்பாண மாணவர் காங்கிரஸ்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஹென்றி பேரின்பநாயகம் இந்த அமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.

1920-ம் ஆண்டு பிற்பகுதியில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றப்பட்ட இந்த அமைப்பு அப்போது இலங்கையில் உருவாகியிருந்த எல்லா அமைப்புக்களையும் விட முற்போக்கானதாக இருந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஆங்கிலேய அரசிடமிருந்து பூரண விடுதலை, இனவாத எதிர்ப்பு, தமிழ் சிங்கள ஐக்கியம், சுயமொழிக்கொள்கை, சாதிப்பாகுபாட்டுக்கு எதிர்ப்பு என்று அப்போது யாரும் துணிந்து வெளியில் சொல்லாத பல கொள்கைகளை இவ் அமைப்புச் சொன்னது. ஆனால் இவ் அமைப்பின் தலைவர்கள் விட்ட மிகப் பெரிய தவறு, பௌத்த சிங்கள இனவாதத்தை கணக்கில் எடுக்காது, தமிழ் சிங்களத் ஐக்கியம் பற்றிப் பேசியது.

மாகாத்மா காந்தியையும், ஜவஹர்லால் நேருவையும் தமது வழிகாட்டிகளாகக் கொண்ட இந்த அமைப்பு, இந்திய தேசிய காங்கிரஸ் பாணியில் இலங்கையில் தேசிய விடுதலை இயக்கத்தை நடாத்த விரும்பியது. இந்த அமைப்பின் தலைவர்களும் தொண்டர்களும் கதர் உடை, கதர் தொப்பி அணிந்தது இவர்களது இந்திய தேசிய காங்கிரஸ் சார்ப்புத் தன்மையை நேரடியாக அடையாளம் காட்டியது.

அது போல் அக் காலத்தில் இலங்கையிலிருந்த ஏனைய அரசியல் அமைப்புக்கள் செய்யாத அளவிற்கு வாலிபர் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான ஆண்டு விழாக்களை நடத்தியது. மூன்று நான்கு நாட்கள் வரை நடை பெற்ற இந்த விழாக்களுக்கு பிரபலமான அரசியல் தலைவர்கள் சிறப்புப் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டனர். 1925-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு விழாவிற்கு பி.டி. எஸ் குலரத்தினா தென்னிலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டதோடு அவரே மாணவர் காங்கிரசுக்கான தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1927-ம் ஆண்டு, ஆண்டு விழாவிற்கு மகாத்மா காந்தி வரவழைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து, சத்தியமூர்த்தி, கலியாண சுந்தரனார், கமலாதேவி. சட்டோபாத்தியாய முதலான



இந்தியத் தலைவர்கள் வரவழைக்கப்பட்டனர்.

1919-ம் ஆண்டு காலகட்டத்தில் ரஷ்யப் புரட்சியின் தாக்கம், இலங்கையிலும் எதிரொலித்தது. இக்காலகட்டத்தில் தொழிலாளர் இயக்கங்களும் தொழிலாளர் நலன்களுக்காக வாதாடும் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

1919-ல் சேர். பொன். அருணாசலம் சி.ஏச்.இசட். பெர்ணாந்து, மார்டினஸ் பெரேரா ஆகியோர் தொழிலாளர் நலனுக்கான லீக்கை உருவாக்கினார்கள். இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் 1920-ல் ஆரம்பிக்கப்பட்டது.

இக் காலகட்டத்தில் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடிகளாக ஏ.ஈ.குணசிங்காவும் நடேச ஐயரும் விளங்கினர். ஏ.ஈ. குணசிங்கா நகரத் தொழிலாளரின் நலனுக்காகவும் நடேச ஐயர்தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவும் வாதாடினார்.

> **கொழும்பில் நிலைமை இவ்வாறு இருக்கும் போது 1920–ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஹென்றி பேரின்பநாயகம் இந்த அமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.**
>
> **1920–ம் ஆண்டு பிற்பகுதியில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றப்பட்ட இந்த அமைப்பு அப்போது இலங்கையில் உருவாகியிருந்த எல்லா அமைப்புக்களையும் விட முற்போக்கானதாக இருந்தது**

1920-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை முழுவதிலும் புகையிரதத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதில் 6 ஆயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

1920-ம் ஆண்டு மார்ச் மாதம் 5000 துறைமுகத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்தனர்.

1923-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட நாடு தழுவிய மிகப் பெரிய பொது வேலை நிறுத்தம் நடந்தது.

இந்த வேலை நிறுத்தங்கள் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், பலத்தையும் எடுத்துக் காட்டுவதாகவும் காலனிய அரசுக்கு எதிரான அவர்களது உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன.

இந்தக் கால கட்டத்தில் இலங்கையின் ஆள்பதியாக இருந்த 'கிளிபேட்' 'இலங்கையில் பெரும் அரசியல் இடர்ப்பாடு ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும், நிலைமைகளை ஆராய்ந்து இடர்களைத் தாண்டி வெற்றி கொள்ளக்கூடிய சிறந்த வழிவகைகளைக் காண ஒரு விசாரணைக் குழுவை அனுப்பி வைக்குமாறும் பிரித்தானிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் உருவாகியிருந்த வாலிபர் காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து விடலாம் என்றும்,

தெற்கிலே உருவாகி வளர்ந்து வந்த தொழிலாளர் இயக்கங்கள் ஒரு வர்க்கப் போராட்டத்தை தூண்டிவிடும் என்றும் கிளிபேட் பயந்தார்.

1926-ம் ஆண்டு நவம்பர் மாதம் கிளிபேட் அனுப்பி வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டே பிரித்தானிய அரசு 1927-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி டொனமூர் ஆணைக் குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்தது.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இந்த ஆணைக்குழுவை புறக்கணிப்பதற்காக அதே தினத்தில் இந்தியாவிலிருந்து மகாத்மா காந்தியை இலங்கைக்கு வரவழைத்தது.

**- நக்கீரன்**